1975 மார்ச் 31]

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வந்த கடிதம் உண்மை என்று தெரிந்து, ஏற்றுக் கொண்டதாகச் சொன்னீர்கள். சட்டமன்ற விதிப்படி தொலைபேசியில் தொடர்புகொள்ளும் ஏற்பாடு இருக்கிறதா? அதை விட................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்த கடிதம் உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அதனுல் தொடர்பு கொண்டு, தெரிந்துகொள்ளப் பட்டது.

திரு. நா. வீராசாமி: தொலைபேசியில் சில சமயங்களில் வேறு யாராவதுகூட அவர்மாதிரியே பேசலாம். சமீபத்தில் இந்திராகாந்தி நகர்வாலா விவகாரத்தில்கூட, இந்திராகாந்தி போலவே (மணி அடிக்கப்பட்டது).

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது அவையுரிமைக் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. நா. கணபதி அவர்கள் அக் குழுவின் அறிக்கையை அளிப்பார்கள்.

4. அறிக்கை அளித்தல்

திரு. அப்துல் சலாம் "மக்கள் குரல்" பத்திரிகை ஆசிரியர் ஆகியோர் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. நா. கணபதி: அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு. அப்துல் சலாம், "மக்கள்குரல்" பத்திரிகை ஆசிரியருக்கு விடுத்த வழக்குரைஞர் அறிக்கையில் பேரவைமதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மீதும், உறுப்பினர்கள் மீதும் களங்கம் கற்பிக்கும் வகையில் குறிப் பிட்டிருப்பது பற்றிய அவையுரிமைமீறல் வழக்கு மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற அவையுரிமைக் குழுவின் அறிக்கையை இந்த அவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னுல்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பிரசென்டேஷன்தான். அதன் மீது விவாதிக்க வேண்டுமென்று சொன்னுல் பின்னர் நாள் குறித்து விவாதிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார் எங்கள் கட்சியின் சார்பில் இரண்டு அட்ஜர்ன்மெண்டு மோஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தத் துறை அமைச்சர் வரவில்லை. வந்திருந்தால் எடுத்துக்கொண்டிருக்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நானும் கூடக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் என் அறையில் வந்து கேட்க வேண்டும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இரண்டு அட்ஜர்மெண்டு மோஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று உணவுத் துறை பற்றியது. மற்றொன்று மருத்துவத் துறை. உணவுத்துறை அமைச்சர் இங்கே இருக்கிறார்கள். இது என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்த இரண்டில் ஒன்றுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகவல் உங்களுக்கு வந்து சேரும். மக்கள் நல் வாழ்வுத்துறையைச் சேர்ந்த மற்றொன்று, அந்த அமைச்சர் அவையில் இல்லாததால், எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5. 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 4 — பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும் — நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,98,10,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".